**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 92/2023**

**Deposition of Witness :PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | மாரியம்மாள் | Taluk | |
| Husband Name | கண்ணையன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 09.03.2026.** | | | |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சாட்சி சொல்ல கோர்ட்டில் இருந்து எதுவும் சம்மன் வந்ததா என்றால் இல்லை. யார் யார் மேலே கேஸ் போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் சரஸ்வதி என்ன பரிகாரம் கேட்டு போட்டிருக்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் யார் தெரிவித்தார் என்றால் நான் தான் தெரிவித்தேன். மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தேதி ஞாபகமில்லை, ஆனால் 2003ம் வருடம் நடந்தது. எனக்கும், என் கணவருக்கும் எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தேதி ஞாபகமில்லை, ஆனால் 1995ம் வருடம் வைகாசி மாதத்தில் நடந்தது.

2) எனக்கு எங்கு திருமணம் நடந்தது என்றால் கோவிலூாரில் உள்ள ரமேஷ் என்பவரின் வீட்டில் நடைபெற்றது. எனக்கு எவ்வளவு திருமண செலவு ஆனது என்றால் ரூ.50 ஆயிரம் செலவு ஆனது. மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் எங்கு திருமணம் நடந்தது என்றால் கோவிலூாரில் உள்ள பஞ்சாயத்து திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி மண்டபம் சின்னமண்டபம் என்றால் சரிதான். மேற்படி மண்டபத்திற்கு ரூ. 2 ஆயிரம் கொடுத்தால் போதுமானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் கரூர் – திண்டுக்கல் Highways ற்கு பாத்தியப்பட்ட இடத்தில் வாழைபழக்கடைதான் வைத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீடு கோவிலூார், வேங்கட சுப்பிரமணியன் கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மேற்படி வீடு 16 அடி நீளமும், 10 அடி அகலமும்

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

கொண்ட வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் குடியிருக்க மட்டும்தான் அனுமதி என்றும், வேற யாருக்கும் பத்திரம் எழுதி கொடுக்க கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த வீடு அஞ்சலையம்மாள் பெயரில் உள்ளது.

3) மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த மகள் மகாலட்சுமி எந்த வருடம் பிறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தேதி ஞாபகமில்லை, 2004ம் வருடம் பிறந்தது. மனுதாரரின் அப்பா என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் சின்ன மளிகைகடை வைத்து நடத்தி வந்தார், மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணமாகி 6 மாதத்தில் இறந்து விட்டார். மனுதாரரின் அம்மா என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் டெக்சில் வேலை பார்த்து வருகிறார். மாதம் என்ன சம்பளம் வாங்குகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ப்ளஸ் டு படித்துள்ளேன். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ல் மனுதாரரும், மனுதாரரின் மகளான மகாலட்சுமியும், மனுதாரருக்கு திருமணத்தின்போது சீதனமாக கொடுக்கபட்ட 4 பவுன் தங்க நகைகளை கரூர் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவின் முன்பாக பெற்று கொண்டு கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4) மனுதாரர் போட்ட 4 பவுன் நகைகளை ஏற்கனவே மனுதாரர் வாங்கிவிட்டார் என்றும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 12 1/2 பவுன் நகை வரதட்சணையாக கொடுக்கப்பட்டது என்று முரணாக சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 12 1/2 பவுன் நகை எடுக்கும்போது நான் கூட போனேனா என்றால் இல்லை. 12 1/2 பவுன் நகையை என்னிடம் கொடுத்து, 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டில் ஒரு அங்கத்தினர் என்றால் சரிதான். நான் கோவிலூாரில் இருந்து 2003லேயே கருருக்கு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு பின்னாடி 1ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்வேனா என்றால் அடிக்கடி செல்வோம். கட்டில், பீரோ எல்லாம் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டார் என்று சொன்னால் நான் இருக்கும் வரைக்கும் இருந்தது. ஆனால் நான் வந்ததற்கு பின்னாடி மனுதாரர் எடுத்து சென்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

5) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கும், பாப்பாத்தி என்கிற ராஜேஸ்வரிக்கும் திருமணம் நடந்தது என்று சொல்லியுள்ளேன், மேற்படி பாப்பாத்தி எந்த ஊரை சார்ந்தவர் என்றால் ராமநாதபுரத்தை சார்ந்தவர். பாப்பாத்தி என்கிற ராஜேஸ்வரிக்கும், திருமலை என்பவருக்கும் ஏற்கனவே திருமணம் நடைபெற்றுள்ளது என்றால் அது பற்றி எனக்கு

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

தெரியாது. பாப்பாத்தி என்கிற ராஜேஸ்வரிக்கும், திருமலை என்பவருக்கும் 19.11.2008 ம் தேதி விவாகரத்து ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரும் எத்தனை வருடம் சேர்ந்து வாழ்ந்திருப்பார்கள் என்றால் குழந்தை பிறந்து 4, 5 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்திருப்பார்கள். அப்போது கணவன், மனைவியாக ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அப்போது பிரிந்து வாழ்ந்து வந்தார்களா என்றால் இல்லை.

6) மனுதாரரின் மகள் மகாலட்சுமி எங்கு பிறந்தது என்றால் GH ல் பிறந்தது. மனுதாரருக்கு வளைகாப்பு எங்கு நடந்தது என்றால் கோவிலூரில் நடந்தது. மேற்படி வளைகாப்பில் எல்லாரும் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். சரஸ்வதிக்கு நடந்த வளைகாப்பில் நான், 1 ம் எதிர்மனுதாரர் குணசேகரன், 2 ம் எதிர்மனுதாரர் சுப்ரமணி அனைவரும் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். GH ல் பிரசவம் நடந்தால் பிரசவ செலவு இலவசம் என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரருக்கும், பாப்பாத்தி என்கிற ராஜேஸ்வரிக்கும் ஒரு குழந்தை பிறந்ததாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபோது அந்த குழந்தையின் பெயர் என்ன என்றால் தெரியவில்லை. அந்த குழந்தை எந்த தேதியில் பிறந்தது என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மகாலட்சுமிக்கு கடந்த 6 மாதத்துக்கு முன்பே குழந்தை பிறந்ததாக சொல்லியுள்ளது விவரம் எனக்கு தெரியாது.

7) என்னுடைய பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் பண்ணாததால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. மகாலட்சுமியின் கணவர் பெயர் என்ன என்றால் ரமேஷ் ஆகும். மகாலட்சுமிக்கும், ரமேஷுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 2023 ல் நடந்தது. தேதி ஞாபகமில்லை. மகாலட்சுமியின் கணவர் எங்கள் சமுதாயத்தை சார்ந்தவர் அல்ல என்றால் சரிதான். மகாலட்சுமியின் மாமனார், மாமியார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மகாலட்சுமியின் கணவர் வீட்டு முகவரி தெரியுமா என்றால் தெரியாது. மகாலட்சுமிக்கும், ரமேஷுக்கும் எங்கு திருமணம் நடந்தது என்றால் திருசெங்கோட்டில் மலை அடிவாரத்தில் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்கு பின்னாடி வேறு ஏதாவது விசேஷம் நடந்தது என்றால் வளைகாப்பு நடந்தது. அது எந்த தேதியில் நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை.

8 ) மகாலட்சுமியை 1 ம் எதிர்மனுதாரர் புதுரோடு, ENP Nursing and primary பள்ளியில் படிக்க வைத்தார் என்றால் சரிதான். மேற்படி பள்ளியில் மகாலட்சுமி படித்த வரை மனுதாரரும், 1 ம் எதிர்மனுதாரரும் ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால்

Sd/–T.Wajitha Thabassm

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

சரிதான். மகாலட்சுமியின் திருமணத்திற்கு பத்திரிக்கை அடித்தார்களா என்றால் பத்திரிக்கை அடித்ததாக சொன்னார்கள். அது பற்றி எனக்கு தெரியாது. மகாலட்சுமியின் திருமணத்திற்கு 1ம் எதிர்மனுதாரரை எந்த தேதியில் அழைத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் போகவில்லை, அவர்கள் இரண்டு பேரும் போய் அழைத்ததாக என்னிடம் சொன்னார்கள். எந்தவொரு தேதியிலும், மனுதாரரும், மகாலட்சுமியும் போய் அழைக்கவில்லை என்றும், நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் எந்த ஒரு நிகழ்வும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9) மகாலட்சுமியும், அவரது கணவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றும், யாரையும் அவர்கள் அழைக்கவில்லை என்று சொன்னால் Love cum Arranged Marriage. மகாலட்சுமியும், அவரது கணவரும் எங்கு வாழ்ந்து வருகிறார்கள் என்றால் மனுதாரருடன் வாழ்ந்து வருகிறார்கள். என்னை இந்த நீதிமன்றத்திற்கு மனுதாரரின் மருமகன் ரமேஷ் தான் அழைத்து வந்தார் என்று சொன்னால் சரிதான். ரமேஷ்ஷின் பெற்றோர் வீட்டிற்கு நான் சென்றிருக்கிறேனா என்றால் இல்லை. ரமேஷின் பெற்றோர் மனுதாரர் சரஸ்வதி வீட்டிற்கு வந்தார்களா என்றால் வந்திருக்கிறார்கள். வளைகாப்பிற்கு கூட வந்தார்கள். வளைகாப்பு எங்கு நடந்தது என்றால் வாணிய செட்டியார் மண்டபத்தில் நடந்தது.

10) மேற்படி வாணிய செட்டியார் மண்டபத்தில் ஒரே ஒரு நிகழ்வுதான் நடந்தது என்றால் வளைகாப்பும், ரிசப்ஷனும் சேர்த்து வைத்தார்கள். மனுதாரர் போட்ட மனுவை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அஞ்சலையம்மாள் பெயரில் உள்ள வீட்டை நானும் பங்கு கேட்டானா என்றால் சரிதான். எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. தற்போது எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். வீட்டை பங்கு கேட்டேன் என்றும், கோவிலுக்கு சொந்தமான இடம் என்பதால் அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் மீது காழ்புணர்ச்சி கொண்டு , உண்மைக்கு புறம்பாக பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கோவில் இடத்தை கேட்கவில்லை, வீட்டையும், கடையும்தான் கேட்டோம். வீடு கேட்டதாக சொல்லியுள்ளபோது அந்த வீட்டின் சர்வே எண் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Sd/–T.Wajitha Thabassm

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்

11) High ways ல் 1ம் எதிர்மனுதாரர் வெளியில் பல நபர்களிடம் கடன்வாங்கி பழக்கடை வைத்து நடத்தி வந்த கடையை நான் பங்கு கேட்டதால்தான் 1ம் எதிர்மனுதாரர் கொடுக்க மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின்போது ரூ. 3 லட்சம் செலவானதாக குறிப்பிட்டுள்ளது, உண்மைக்கு புறம்பானது என்றும், திருமணத்திற்கு ரூ. 20 ஆயிரம் செலவு ஆனது என்றும், அதை 1ம் எதிர்மனுதாரரே ஏற்றுகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்தான், 1ம் எதிர்மனுதாரரை விட்டு விலகி இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 1ம் எதிர்மனுதாரர் மீது காழ்புணர்ச்சியின் காரணமாகத்தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2003 லேயே கருருக்கு வந்து விட்டேன் என்றும், அங்கு நடந்த நிகழ்வுகள் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மகாலட்சுமி, எனக்கு பிறக்கவில்லை என்று, 1ம் எதிர்மனுதாரர் சொல்லி நான் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மைக்கு புறம்பாக நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த நிருபண வாக்குமூலம் ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்